இருப்பதாலே, அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை எடுக்க, தொடர்பான தஸ்தாவேஜுகளை இராமநாதபுரம் ராஜா அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று, அனுப்பப்பட்டதா, இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, அதே பத்திரிகைகளில் இன்னொரு செய்தியையும் படித்தேன். இரு நாடுகளின் யாத்திரிகர்களும் அந்தத் தீவிற்குச் சென்று திரு விழாவை நல்ல முறையில் கொண்டாடினார்கள். இது ஒரு அரசு களுக்கும் நல்ல தோழமை இருப்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனையை இங்கு அதிகமாக விவாதிக்காமல் இருப்பதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்பொழுது திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இருக்கிறார். அவை அனுமதியளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினால், அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டுவந்து விடையளிக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நாளைய தினத்திற்கு அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். இராமச் சந்திரன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும்.

3. அறிக்கை அளித்தல்.

(i) உறுப்பினர் திரு வ. ஜார்ஜ் மீதுள்ள உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அவை உரிமைக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் பேரவைமுன் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவைத் தலைமை மீது ஒருதலைக் குற்றம்சாட்டி, அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றிய அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன்.

4. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி அறிக்கை— பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1967-68-ம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவை முன்வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றுவார்.